வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 999 /ஆ1 /2022, நாள் : 06.04.2022

பொருள்: தமிழ் வளர்ச்சித் துறை – 2021–2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களின் பிறந்த நாளன்று மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்திப் பரிசுகள் வழங்குதல் – 2022–2023–ஆம் நிதியாண்டிற்கு அண்ணல் அம்பேத்கர் அவர்களின் (14.04.2022) பிறந்த நாளையொட்டி ஏப்ரல் 19–ஆம் நாள் பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் (ம) பாராட்டுச் சான்றிதழ் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : சென்னை–8, தமிழ் வளர்ச்சி இயக்குநர்(மு.கூ.பொ) அவர்களின் கடிதம் ந.க.எண்.2673/ ஆ.மொ.4/2022, நாள் 28.03.2022

#######

பார்வையில் காணும் கடிதத்திற்கிணங்க தமிழ் வளர்ச்சித் துறை 2021–2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களின் பிறந்த நாளன்று மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்திப் பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட உள்ளன. அவ்வகையில் 2022–2023–ஆம் நிதியாண்டிற்கு மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கு இம்மாவட்டத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் (14.04.2022) பிறந்த நாளையொட்டி ஏப்ரல் 19–ஆம் நாளன்று பேச்சுப் போட்டிகள் நடைபெற உள்ளது.

பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பெறும் பேச்சுப் போட்டியில் 6 முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பங்கேற்கும் வகையில் மாவட்டக் கல்வி அலுவலர் வாயிலாக சுற்றறிக்கை அனுப்பி முதற்கட்டமாக கீழ்நிலையில் பேச்சுப்போட்டி நடத்தி மாணவர்களை தெரிவு செய்து மாவட்ட அளவிலான போட்டியில் பங்கேற்க 25 மாணவர்களுக்கு மேல் மிகாமல் இருக்கும் வகையில் பெயர்ப்பட்டியல் அனுப்பப்பெற வேண்டும்.

மேலும், இம்மாவட்டத்தில் மாவட்டக் கல்வி அலுவலரால் நியமிக்கப்பெறும் அரசுப்பள்ளித் தலைமையாசிரியர் வாயிலாக இப்போட்டியினை நடத்தவும், பேச்சுப் போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்களைத் தெரிவு செய்ய 3 நடுவர்களை நியமிக்குமாறும், இணைப்பில் காணும் பார்வைக்கடித்தின்படி அதில் குறிப்பிட்டுள்ளவாறு போச்சுப் போட்டிகளை நடத்திடுமாறு மாவட்டக் கல்வி அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பார்வைக் கடித நகல்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர்.
(தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும்)

நகல்– அனைத்து வகை தலைமை ஆசிரியர்கள், வே.மா.

//ப.த.//